# 13. வரிப்பணத்தை அறவிடுதல் - செயல்வழிப் படம்

டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் செய்திகள்/ கொடுக்கல் வாங்கல்கள் (SMS / WhatsApp / e-mail)

மதிப்பீட்டு அறிவித்தலை அச்சிடுதல்

பொறுப்பு: நகர ஆணையாளர் /செயலாளர்

மதிப்பீட்டுப் புத்தகம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை மற்றும் மதிப்பீட்டு எதிர்ப்புக்களை சமர்ப்பிக்க முடியும் என்பதை வர்த்தமானியில், பத்திரிகைகளில் அறிவித்தல்

பொறுப்பு: மேயர் / தவிசாளர்

மதிப்பீட்டுப் புத்தகத்தினைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல் மற்றும் மதிப்பீட்டு எதிர்ப்புக்கள் ஏட்டினைப் பொதுமக்களுக்குத் திறந்து வைத்தல்

பொறுப்பு: நகர ஆணையாளர்/ செயலாளர்

மதிப்பீட்டு அறிவித்தலை சொத்தின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு மின்னஞ்சல் செய்தி ஊடாக அல்லது நேரடியாகக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

பொறுப்பு: நகர ஆணையாளர்/ செயலாளர்

மதிப்பீட்டு அறிவித்தலைச் சமர்ப்பித்து அல்லது சொத்து சம்பந்தமாக விபரங்களைக் குறிப்பிட்டு வரிப்பணம் செலுத்துவதற்கு முன்வரல் அல்லது இணையத்தளம் ஊடாக செலுத்துதல்

பொறுப்பு: சொத்தின் உரிமையாளர் அல்லது வதிவாளர்

ஏற்புடைய சொத்துக்களை இனங்கண்டு செலுத்தப்பட வேண்டிய வரிப்பணத்தின் அளவை அறிவித்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

முழுமையான தொகையை செலுத்துவதற்கு இணங்குகிறீர்களா?

ஆம்

வழங்க முடியுமான கழிவுகளைக் கருத்திற்கொண்டு பணத்தை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

இல்லை

செலுத்தும் தொகைக்குத் தகுந்த கழிவுகள் இருப்பின், அதனையும் கருத்திற்கொண்டு பணத்தை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

வரிப்பண ஏட்டினை இற்றைப்படுத்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

කාර්යසාධක
දර්ශකය



# 13. வரிப்பணத்தை அறவிடுதல்

## 1. அறிமுகம்

பிரதேச சபையொன்றினால் தனது அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் புவியியல் பிரதேசமொன்று பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் மேம்படுத்தப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்திற்கு குறித்த பிரதேச சபையினாலும் ஏதேனும் மாநகர சபை அல்லது நகர சபையினாலும் தமது அதிகாரப் பிரதேசத்தினுள் கட்டணம் அறவிடாது வழங்கப்படுகின்ற சேவைகளுக்கு ஏற்படுகினை செலவினங்களை ஈடு செய்வதற்காக உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் விதிக்கப்படுகின்ற வீதமொன்றின் கீழ் அறவிடப்படும் கட்டணம் வரிப்பணம் என அழைக்கப்படும். அவ்வாறான பிரதேசமொன்றினுள் சேவைகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவினம் மற்றும் அந்தப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு சொத்தினதும் வருடாந்தப் பெறுமதிகளின் கூட்டுத்தொகையிடையிலான வீதத்தை (சதவீதம்), அவ்வாறான ஏதேனும் சொத்தொன்றின் வருடாந்தப் பெறுமதியினால் பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகின்ற தொகை அந்த சொத்துக்காக செலுத்தப்பட வேண்டிய வருடாந்த வரிப்பணம் ஆகும். மேற்குறித்தவாறு உள்ளூராட்சி நிறுவனத்தினால் இந்த சதவீதம் வருடாந்தம் கணக்கிடப்பட்டுத் தீர்மானிக்கப்படும். வரிப்பணம் என்பது ஒரு வரி அல்ல.

## 2. சட்டரீதியான அதிகாரம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவு மூலமும், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவு மூலமும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவு மூலமும் அந்த நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளையும் பணிகளையும் செய்யும்போது மற்றும் நிறைவேற்றும்போது மேற்கொள்ப்படும் செலவினங்களை ஈடு செய்வதற்காக -

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 230 ஆவது பிரிவு மூலம் மாநகர சபைகளுக்கும்;

(ஆ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 160 ஆவது பிரிவு மூலம் நகர சபைகளுக்கும் ; மற்றும்

(இ) பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவு மூலம் பிரதேச சபைகளுக்கும்,

வரிப்பணத்தை விதித்து அறவிடுவதற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 3. தகைமைகள்/ ஏற்புடைமை

(அ) ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனமொன்றில் வரிப்பணம் அறவிடுவதற்கு உட்பட்ட பிரதேசமொன்றினுள் அமைந்துள்ள மற்றும் அந்த நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் அசையாத சொத்தாக அல்லது அசையாத வகைச் சொத்தாக இருக்க வேண்டும்.

(ஆ) குறித்த ஏதேனும் சொத்தின் உரிமையாளர் அல்லது வதிவாளர் இந்த வரிப்பணத்தைச் செலுத்த வேண்டும். (சொத்தின் வதிவாளர் குறித்த சொத்தின் உரிமையாளராக இருப்பினும் இல்லாவிடினும் அதன் வதிவாளர் - சபையினால் வழங்கப்படுகின்ற சேவையினால் பயன் பெறுபவர் - வரிப்பணம் செலுத்த வேண்டிய நபர் ஆவார்)

## 4. செலுத்த வேண்டிய கட்டணம்

(அ) உள்ளூராட்சி நிறுவனத்தினால் சொத்தின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு வழங்கப்படுகின்ற மதிப்பீட்டு அறிவித்தலில் குறிப்பிடப்படும் தொகையைச் செலுத்த வேண்டும்.

(ஆ) மதிப்பீட்டு அறிவித்தலை வழங்கும் சந்தர்ப்பத்தில் முன்பு செலுத்த வேண்டிய வரிப்பண நிலுவை காணப்படின், அந்த தொகை எவ்வளவு என்பது அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிலுவைத் தொகையினையும் செலுத்த வேண்டும்.

(இ) இந்த வருடாந்த வரிப்பணத்தை ஒரே தடவையில் அல்லது காலாண்டு அடிப்படையில் செலுத்தலாம்.

(ஈ) ஏதேனும் சொத்தொன்றுக்காக செலுத்த வேண்டிய வரிப்பண அளவில் முழு ஆண்டிற்கும் ஏற்புடைய தொகை உரிய ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பு செலுத்தப்படுமாயின், அந்த மொத்தத் தொகையில் 10% கழிவொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை செலுத்துபவருக்கு உண்டு. (வருடம் ஆரம்பிப்பதற்கு முன்பு காணப்பட்ட நிலுவையொன்று இருப்பின், அந்த நிலுவையினையும் அந்த சந்தர்ப்பத்திலேயே செலுத்துவதாயின் மாத்திரமே அந்தக் கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்)

(உ) அத்துடன் ஆண்டின் ஏதேனும் காலாண்டிற்கு ஏற்புடைய வரிப்பணம், அந்தக் காலாண்டின் முதலாவது மாதம் நிறைவடைவதற்கு முன்பு செலுத்தப்படுமாயின், அந்தக் காலாண்டிற்கு ஏற்புடைய தொகையில் 5% கழிவொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை வரிப்பணம் செலுத்துபவருக்கு உண்டு. (அந்தக் கழிவினைச் செலுத்துவதிலும் முன்னைய காலத்திற்கு ஏற்புடைய நிலுவை இருப்பின் அதனையும் செலுத்த வேண்டும்).

## 5. சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

(அ) உள்ளூராட்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற மதிப்பீட்டு அறிவித்தல்.

(ஆ) மதிப்பீட்டு அறிவித்தல் இல்லாத சந்தர்ப்பத்தில், ஏற்புடைய சொத்தின் அமைவிடத்தை (வீதி, வரிப்பண இலக்கம், முகவரி) குறிப்பிடுவதன் மூலம் முகப்பு அலுவலக உத்தியோகத்தருக்கு இந்த தகவல்களை இலகுவாக இனங்காண முடியும்.

## 6. பணி ஒழுங்குமுறை

| பணி நடவடிக்கை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| மதிப்பீட்டு அறிவித்தலை அச்சிடுதல் | ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 31 ஆந் திகதிக்கு முன்பு | நகர ஆணையாளர் /செயலாளர் |
| மதிப்பீட்டுப் புத்தகம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை மற்றும் மதிப்பீட்டு எதிர்ப்புக்களை சமர்ப்பிக்க முடியும் என்பதை வர்த்தமானியில், பத்திரிகைகளில் அறிவித்தல் | ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 31 ஆந் திகதிக்கு முன்பு | மேயர் / தவிசாளர் |
| மதிப்பீட்டுப் புத்தகத்தினைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல் மற்றும் மதிப்பீட்டு எதிர்ப்புக்கள் ஏட்டினைப் பொதுமக்களுக்குத் திறந்து வைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 01 முதல் ஜனவரி 31 வரை | நகர ஆணையாளர்/ செயலாளர் |
| மதிப்பீட்டு அறிவித்தலை சொத்தின் உரிமையாளருக்கு அல்லது வதிவாளருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 க்கு முன்பு | நகர ஆணையாளர்/ செயலாளர் |
| மதிப்பீட்டு அறிவித்தலைச் சமர்ப்பித்து அல்லது சொத்து சம்பந்தமாக | | சொத்தின் உரிமையாளர் அல்லது வதிவாளர் |

| பணி நடவடிக்கை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| விபரங்களைக் குறிப்பிட்டு வரிப்பணம் செலுத்துவதற்கு முன்வரல் அல்லது இணையத்தளம் ஊடாக செலுத்துதல் | | |
| ஏற்புடைய சொத்துக்களை இனங்கண்டு செலுத்தப்பட வேண்டிய வரிப்பணத்தின் அளவை அறிவித்தல் | செலுத்துவதற்கு முன்வரும் சந்தர்ப்பத்திலேயே | முன் அலுவலக உத்தியோகத்தர் |
| செலுத்துவதற்கு இணங்கிய பணத் தொகைக்கு ஏற்ற கழிவுகளைக் கருத்திற்கொண்டு ஏற்புடைய தொகையை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல் | பணத்தைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலேயே | முன்னிலை அலுவலக உத்தியோகத்தர் |
| வரிப்பண ஏட்டினை இற்றைப்படுத்தல் | 1. கணனி மென்பொருளில் அந்த சந்தர்ப்பத்திலேயே<br>2.அவ்வாறில்லாதபோது பணம் செலுத்திய திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள் | 1. முன் அலுவலக உத்தியோகத்தர்<br>2. விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |

குறிப்பு: 1. சொத்தின் மதிப்பீட்டிற்கு எதிர்ப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், வருடத்திற்கு ஏற்புடைய வரிப்பணத்தைச் சொத்தின் உரிமையாளர் அல்லது வதிவாளர் செலுத்த வேண்டும்.

## 7. வரிப்பணத்தைச் செலுத்துவதற்குத் தவறுவதன் விளைவுகள்

(அ) ஏதேனும் வரிப்பண வலயத்தில் அமைந்துள்ள அசையாத சொத்தொன்று அல்லது அசையாத சொத்து வகையொன்றின் மீது உள்ளூராட்சி நிறுவனத்தினால் விதிக்கப்படுகின்ற வரிப்பணம், அந்த நிறுவனத்தினால் விதிக்கப்படும் காலத்தினுள் அந்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கு உரிமையாளர் அல்லது வதிவாளர் செலுத்த வேண்டும். யாரேனும் நபர் உரிய காலத்தினுள் அந்த வரிப்பணத்தைச் செலுத்துவதற்கு தவறினால், அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சபையின் உத்தியோகத்தர் ஒருவரின் அல்லது யாரேனும் வரி சேகரிப்பாளரின் பெயரில் நடுக்கட்டுப் பத்திரமொன்றை வழங்குவதற்கு நகர ஆணையாளருக்கு/ செயலாளருக்கு சட்டரீதியான அதிகாரம் உண்டு.

(ஆ) நகர ஆணையாளர்/ செயலாளரினால் அவ்வாறான அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படும்போது, அந்த அனுமதிப்பத்திரம் கிடைத்த நபரினால் ஏற்புடைய சொத்தின் மீது காணப்படும் யாரேனும் நபருக்குச் சொந்தமான சகல அசையும் சொத்துக்களையும் தடை செய்து விற்பனை செய்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிட்டு உள்ளூராட்சி நிறுவனத்தின் நிதியத்தில் வைப்புச் செய்வதும் சட்டபூர்வமானதாகும்.

(இ) இவ்வாறு எதேனும் அசையும் சொத்தினைத் தடை செய்வதற்கான நடுக்கட்டுப் பத்திரமொன்றை வழங்குவதற்கான கட்டணமாக பின்வருமாறு தொகையொன்றை அறவிடுவதற்கும் அதிகாரம் உண்டு.

i. வரிப்பண நிலுவை ஏற்புடையதாகும் சொத்து வதிவிடமாக அல்லது வெற்றுக் காணியாக இருப்பின், அறவிடப்பட வேண்டிய தொகையில் 15% அளவு; அல்லது

ii. வரிப்பண நிலுவை ஏற்புடையதாகும் சொத்து வதிவிடமாக அல்லது வெற்றுக் காணியாக இல்லாமல் வேறு வகையான சொத்தாக இருப்பின், அறவிடப்பட வேண்டிய தொகையில் 20% அளவு.

(ஈ) அத்துடன் அசையும் சொத்தினைத் தடை செய்யும் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய தொகையில் 10% மேலதிக கட்டணத்தையும் வரிப்பணத்தைச் செலுத்த வேண்டிய நபர் செலுத்த வேண்டும்.

(உ) மேலும், தடை செய்ய முடியுமான அசையும் சொத்து ஏதேனும் இல்லாத சந்தர்ப்பத்தில் ஏற்புடைய அசையாத சொத்தினைத் தடை செய்து விற்பனை செய்வதற்கும் சட்டரீதியான அதிகாரம் கிடைத்துள்ளது.